# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2022
## அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## The Tamil Competition 2022
## The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.

### வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டிக்கான விதிமுறைகளும் விளக்கங்களும் (இணைப்பு: 5)

1) இப்போட்டி பின்வரும் வயதுப்பிரிவுகளுக்கு நடாத்தப்படும்.

| | |
|---|---|
| ஆரம்பப் பிரிவு - 5 வயது | கீழ்ப் பிரிவு - 6-7 வயது |
| மத்திய பிரிவு - 8-9 வயது | மேற் பிரிவு - 10-11 வயது |
| அதிமேற் பிரிவு - 12-14வயது | இளைஞர் பிரிவு - 15-17 வயது |

2) 2) வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியிலே கேட்கப்படும் கேள்விகளுக்கு, குடும்பங்கள் - தமிழ்க்கல்வி நிலையங்கள் ஆகியவற்றிலும் - தமிழரின் திருமணங்கள் - தமிழ்க் கலாசார நிகழ்ச்சிகள் மற்றும் ஒன்றுகூடல்கள் போன்ற பொது வைபவங்களிலும் நாளாந்தம் இடம்பெறும் உரையாடல்களைப் போன்று இயல்பானதாகப் போட்டியாளர்களின் பதில்கள் இருக்கலாம். கேட்கப்படும் கேள்விகள் உலகத் தமிழர் சமுதாயம் சம்பந்தமானதாகவம் அவரவர் வயதுப்பிரிவிற்கேற்ப வேறுபட்ட தரங்களைக் கொண்டதாகவும் இருக்கும். மேற்பிரிவுப் போட்டியாளர்கள் தங்களுடைய பெற்றோரின் தாய்நாடு பற்றியும் அங்குள்ள தற்கால நிலைமை பற்றியும் அறிந்திருத்தல் விரும்பத்தக்கது.

3) இவ்வுரையாடல் சுமார் 3 தொடக்கம் 6 நிமிடங்களுக்கு இடம்பெறும். ஒவ்வொரு போட்டியாளரிடமும் அறிமுகக் கேள்விகளுடன், குறைந்தது 5 கேள்விகள் கேட்கப்படும். உரையாடும் தரத்திற்குமட்டும் புள்ளிகள் வழங்கப்படுமே தவிர, போட்டியாளர்களின் பதில்களிற் சொல்லப்பட்டவற்றின் பொருள் சரியானதோ தவறானதோ என்பதற்காகப் புள்ளிகள் குறைக்கப்படமாட்டாது. ஆரம்பப் பிரிவு சிறுவர்களுக்குப் படங்களைக் காட்டிக் கேள்விகள் கேட்கப்படும்.

4) போட்டியாளர்கள் அனைவரும் போட்டி நடைபெறும் மண்டபத்திற்கு வெளியே ஒரு அறையிலே தங்கும்படி வேண்டப்படுவார்கள். அழைக்கப்படும் போட்டியாளர் மட்டுமே போட்டி நடைபெறும் மண்டபத்திற்கு வர அனுமதிக்கப்படுவார். இப்போட்டிகளின் போது பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இந்தவேளையில் பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் முன்னுரிமை வழங்கப்படும். போட்டியாளரின் பெற்றோர் முன்கூட்டியே மண்டபத்தில் வந்து இருக்கலாம் அல்லது தமது பிள்ளைகளை அழைக்கும் போது அவர்களுடன் மண்டபத்திற்குள் வரலாம். ஏற்கனவே போட்டிகளைப் பார்த்த பெற்றோரும், குடும்பத்தினரும், போட்டி நடைபெறும் மண்டபத்தில் இருந்து வெளியே சென்றால் அவர்கள் பின் போட்டியில் பங்குபற்ற இருக்கின்ற தமது பிள்ளைகளைச் சந்திக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

5) வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியில் ஆரம்ப இலக்கங்களைப் பெற்ற போட்டியாளர்களும், அவர்களது பெற்றோர்களும் போட்டி ஆரம்பமாகி 30 நிமிடங்கள் வரை போட்டி நடைபெறும் மண்டபத்திலிருந்து வெளியே செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**6)** போட்டியின் போது **உச்சரிப்பு** (20 %), **சொற்பிரயோகம்** (30 %), **உரையாடும் திறன் மற்றும் பங்குபற்றும் நிலை** (50%) ஆகியன கவனிக்கப்படும்.

**7)** **உச்சரிப்புத் திறன்** (20%)

- பிராந்தியப் பேச்சு வழக்கு: அதாவது இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் நடைமுறையில் உள்ள தமிழ் உச்சரிப்புகளும், அங்கு வதிவோர் பேச்சு வழக்குகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.
- முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள / ண, ன, ந / ற, ர, ட வேறுபாடுகள்
- வல்லின, இடையின, மெல்லின வேறுபாடு அறிந்து தெளிவாக உரையாடுதல், தூய தமிழ் உச்சரிப்பு
- சொற்களை விழுங்காது உரையாடுதல்

**8) சொற்பிரயோகம் (30 %)**

- தெளிவான, தூய தமிழ் மொழி நடையாக உரையாடல் இருத்தல் வேண்டும்.
- உரையாடலின் போது ஆங்கிலச் சொற்கள் பயன்படுத்தினால் புள்ளிகள் குறைக்கப்படும். (உதாரணம்: ‘பந்து’ என்பதற்குப் பதிலாக ‘Ball’ என்று பாவிப்பது தவிர்க்கப்பட வேண்டும்).
- ஒரு ஆங்கிலச் சொல்லுக்கு உரிய தமிழ்ப்பதம் இல்லாதவிடத்தில் (அல்லது உரிய தமிழ்ப்பதம் பாவனையில் அதிகம் இல்லாதவிடத்தில்) அதே சொல்லை அதே உச்சரிப்புடன் பயன்படுத்தலாம். உ+ம்: Australia, Calculator, Video, DVD, CD எனும் பொதுப்பாவனையிலுள்ள சொற்கள் ஏற்கப்படும்.
- கேள்விகள் விளங்காவிட்டால், போட்டியாளர் அந்தக் கேள்விகளை மீண்டும் ஒரு முறை வினாவும்படி கேட்கலாம். அப்படியும் கேள்விகள் விளங்காத சந்தர்ப்பத்தில், இலகுவான விதத்தில் கேள்விகள் கேட்கப்படும்.

**9) உரையாடும் திறன் மற்றும் பங்குபற்றும் நிலை (50 %)**

- பல விதமான வினாக்களுக்கும் சரியான அளவான பதில் அளிக்கும் தன்மை.
  - விரிவான பதில்களை எதிர்பார்த்துக் கேட்கப்படும் வினாக்களுக்கு விரிவான பதில்

  உ+ம்: உங்களுடைய மறக்கமுடியாத ஒரு சம்பவம் பற்றிக் கூறுங்கள்?
  - சுருக்கமான பதில் எதிர்பார்க்கப்படும் வினா,

  உ+ம்: உங்களுக்குப் பிடித்த ஒரு பறவையின் பெயரைச் சொல்லுங்கள்?
- சரளமாக உரையாடும் தன்மை. அநாவசியமான, அளவிற்கதிகமான, அதிகப்பிரசங்கித்தனமான, உரையாடலுக்கும், வெட்டு ஒன்று துண்டு இரண்டு போல் அமையும் ஒரு வரிப் பதில்களுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும்.
- உரையாடலை இரசித்துப் பங்குகொள்ளும் தன்மை. உணர்ச்சிகளுக்கு ஏற்றவாறு முகபாவனைகளை வெளிப்படுத்தும் ஆற்றல்
- போட்டியாளர்கள் நடுவர்களைப் பார்த்துத் தன்னம்பிக்கையுடன் உரையாடுதல். (குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, நடுவர்களை மட்டும் பார்ப்பதையோ, நிலம், சுவர், கூரை ஆகியவற்றை மட்டும் பார்ப்பதையோ தவிர்த்தல் வேண்டும். உரையாடலின் போதும் கேள்விகள் கேட்கப்படும் போதும் அலட்சியமாக இருப்பதைத் தவிர்த்தல் வேண்டும்).
- அடக்கமாகவும், நடுவர்களை மரியாதை செய்தும் உரையாடுதல்.
- கேள்வி கேட்கப்படும் போது குறுக்கீடு செய்யக்கூடாது. குறுக்கீடு செய்வதனால் கேள்வியை அவதானிக்காது, திரும்பவும் கேள்வியைக் கேட்டால் அதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
- சைகைகளினால் வழங்கப்படும் பதில்களுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும்.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு,**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**